**அம்பாறை நகர சபை**

**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 09 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 08 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 சனவரி 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாறை நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீடீ/இபொகநி ஆம் இலக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**-----------------------------------------------**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கடைவாடகைப் பதிவேட்டின் பிரகாரம் நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 286,341 ஆக இருந்த போதிலும் அது ஐந்தொகையில் ரூபா 259,742 ஆக ரூபா 26,599 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 210,817 ஐந்தொகையில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன்கொடுத்தோர் பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் (பொது வழங்கல்) மீதி ரூபா 1,860,592 ஆக இருந்த போதிலும், அது ஐந்தொகையில் ரூபா 362,127 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக கடன்கொடுத்தோர் ரூபா 1,498,465 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வருமானப் பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் கடை வாடகை வருமானம் ரூபா 3,063,630 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 3,236,266 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. இதனால் கடை வாடகை வருமானம் ரூபா 172,636 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் ஆதன வரி வருமானம் ரூபா 8,958,133 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 7,046,434 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதனால் ஆதனவரி மற்றும் வரி வருமானம் ரூபா 1.911,696 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை**

**------------------------------------------------------------------**

முதலீடு ரூபா 80,306 தொடர்பாக முதலீட்டுச் சான்றிதழ் மற்றும் முதலீட்டு வட்டிப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) உடற்பயிற்சி நிலையத்திற்கு பொருட்களை வழங்குவதற்கும் உபகரணங்களுக்காகவும் கொடுப்பனவு செய்வதற்கு 2013 ஒக்தோபர் 06 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 1,992,300 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 65,770 தொகையான முத்திரை வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 தொங்கல் கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,450 தொகையான மீதியொன்று தொங்கல் கணக்கில் காண்பிக்கப்படுவதுடன் அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 411,022 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,330,220 ஆக இருந்தது. ஆதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 1,741,242 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 900,155 பதிவாளர் நாயகத்திடமிருந்தும், நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 184,333 கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் கிடைக்கவேண்டியிருந்ததுடன் அந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

----------------------------------------------------------

பின்வரும் செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 5,455,994 தொகையான கடன் பெறப்பட்டிருந்ததுடன், அந்தக் கடன் தொகைக்குரிய வட்டி மற்றும் தவணைப் பணம் செலுத்தாமையினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடனின் அளவு ரூபா 3,471,269 இற்காக ரூபா 1,207,079 தொகையான வட்டியைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தவணைப்பணமாக அனுப்ப வேண்டியிருந்த பெறுமதிசேர் வரித்தொகை (VAT) 2009 ஆம் ஆண்டு முதல் அனுப்பிவைக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதன் பிரகாரம் அனுப்ப வேண்டிய ரூபா 4,139,649 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------------

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 10 சதவீதம் முதல் 107 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான அறவிடல்